# சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் வாகன நிறுத்துமிடம் திறப்பு

*சென்னை, ஜன. 16:* சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் புதன்கிழமை (ஜன. 15) முதல் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

சென்னையில் மெட்ரோ ரயில் சேவையை நாள்தோறும் சுமார் 1 லட்சம் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். மெட்ரோ ரயில் நிலையத்துக்கு வரும் பயணிகளின் வசதிக்காக எழும்பூர், நேரு பூங்கா, கீழ்ப்பாக்கம், பச்சையப்பன் கல்லூரி, ஷெனாய் நகர் உள்ளிட்ட 23 மெட்ரோ ரயில் நிலையங்களில் வாகன நிறுத்தும் இடம் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இதில், 17 ரயில் நிலையங்களில் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் அளவுக்கு இடவசதி உள்ளன.

இந்நிலையில், முக்கிய நிலையமான சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் வாகன நிறுத்தும் இடம் அமைக்கப்பட வேண்டும் என பயணிகள் கோரிக்கை வைத்திருந்தனர். பயணிகளின் கோரிக்கையை ஏற்று சென்ட்ரல் நிலையத்தின் தரைத்தளத்தில் கார் மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்தும் அமைக்கும் பணி நடைபெற்று வந்தது. இந்தப் பணி அண்மையில் முடிவடைந்ததைத் தொடர்ந்து, சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் வாகன நிறுத்தம் புதன்கிழமை (ஜன. 15) முதல் பயன்பாட்டுக்குத் திறக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, மெட்ரோ ரயில் அதிகாரிகள் கூறுகையில், இந்த வாகன நிறுத்துமிடத்தில் ஒரே நேரத்தில் 100 கார்களையும், 180 முதல் 200 வரையிலான இருசக்கர வாகனங்களையும் நிறுத்தலாம். இதேபோல், வாகன நிறுத்தும் இடத்தில் இருந்து எளிதாக நிலையத்துக்குச் செல்லும் வகையில் மின்தூக்கி, 2 சாய்தளப்பாதை போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இருசக்கர வாகனத்துக்கு ஒரு மணி நேரத்துக்கு ரூ.10, நான்கு சக்கர வாகனத்துக்கு ஒரு மணி நேரத்துக்கு ரூ.25 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ ரயில் பயண அட்டை மூலம் மட்டுமே பார்க்கிங் கட்டணத்தைச் செலுத்த முடியும் என தெரிவித்தனர்.

